Q.C.063

## DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| **Name of the Test:** | Departmental Test on Land Laws and other religious Acts for Hindu Religious and Charitable Endowments Department (Without Books) | 156 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. The Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 became permanent by virtue of the
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 கீழ்க்கண்ட எந்த சட்டத்தின்படி நிரந்தரமாக்கப்பட்டது?

(A) Act 8 of 1965
1965ம் ஆண்டு 8வது சட்டம்

(B) Act 18 of 1965
1965ம் ஆண்டு 18வது சட்டம்

(C) Act 8 of 1955
1955ம் ஆண்டு 8வது சட்டம்

(D) Act 18 of 1955
1955ம் ஆண்டு 18வது சட்டம்

2. The Zamindari system was an innovation made by the
ஜமீன்தாரி முறையை கண்டுபிடித்தவர்கள் யார்?

(A) French
பிரஞ்சுக்காரர்கள்

(B) Dutch
டச்சுக்காரர்கள்

(C) British
ஆங்கிலேயர்கள்

(D) Mohammedans
முகமதியர்கள்

3. The Patta Pass Book is issued under section ———— of the Tamilnadu Patta Pass Book Act, 1983.
தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம், 1983ன் எப்பிரிவின் கீழ் பட்டா பாஸ்புக் வழங்கப்படுகிறது

(A) 3
(B) 6
(C) 4
(D) 5

4. As per Tamil Nadu Patta Pass Book Act, 1983 the certified copies of entries in the Register of Patta pass book can be obtained under section
தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம், 1983ன் எப்பிரிவின் கீழ் பட்டா பாஸ்புக் பதிவேட்டில் உள்ள பதிவுகளை சான்றிட்ட நகலாக பெற முடியும்?

(A) 7
(B) 9
(C) 10
(D) 8

5. Which is called a grant in favour of a particular brahmin family?
கீழ்க்கண்டவற்றுள் எது ஒரு குறிப்பிட்ட பிராமண குடும்பத்திற்கு வழங்கப்படும் கொடை ஆகும்?

(A) Dharmasanam
தர்மசானம்

(B) Jagir
ஜாகிர்

(C) Srotriyam
ஸ்ரோட்ரியம்

(D) Agraharam
அக்ரஹாரம்

6. Provisions regarding issue of patta pass book for house site is made under which section of the Tamilnadu Patta Pass Book Act, 1983
தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம், 1983ன் எப்பிரிவின் கீழ் வீட்டடி மனைகளுக்கு பட்டா பாஸ்புக் வழங்கப்படுகிறது?

(A) 22

(B) 23

(C) 12

(D) 13

7. The Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 has been made applicable to the whole of Tamilnadu by
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955 கீழ்க்கண்ட எந்த சட்டத்தின்படி தமிழ்நாடு முழுவதும் நடைமுறைக்கு வந்தது?

(A) Act 4 of 1976
1976ம் ஆண்டு 4வது சட்டம்

(B) Act 8 of 1976
1976ம் ஆண்டு 8வது சட்டம்

(C) Act 14 of 1976
1976ம் ஆண்டு 14வது சட்டம்

(D) Act 18 of 1976
1976ம் ஆண்டு 18வது சட்டம்

8. The Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 consists of
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச்சட்டம், 1955 மொத்தம் எத்தனை சட்டப்பிரிவுகளை கொண்டது?

(A) 8 sections
8 பிரிவுகள்

(B) 9 sections
9 பிரிவுகள்

(C) 18 sections
18 பிரிவுகள்

(D) 19 sections
19 பிரிவுகள்

9. Under the Madras Presidency, how many categories of land tenures existed?
சென்னை மாகாணத்தில் எத்தனை நிலநிர்வாக முறைகள் இருந்தன?

(A) 1
(B) 2
(C) 3
(D) 4

10. Tamilnadu Minor Inams Abolition Act, 1963 makes provisions regarding service inams under section
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச்சட்டம் 1963ல் எப்பிரிவு ஊழிய மானியங்கள் பற்றி கூறுகிறது?

(A) 11
(B) 21
(C) 10
(D) 20

11. The value-of the land would be adversely affected if only a single crop is cultivated in double crop field is pointed out in
கீழ்க்கண்ட எந்த வழக்கில் இரு பருவ பயிரிடும் நிலத்தில் ஒரு பருவ பயிர் மட்டும் சாகுபடி செய்தால் நிலம் பாதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டது?

(A) Ramasamy Gounder -vs -Perianna Mooppan
இராமசாமி கவுண்டர் (எதிர்) பெரியன மூப்பன்

(B) Rethinam -vs- Kuppusamy Odayar
இரத்தினம் (எதிர்) குப்புசாமி ஒடையார்

(C) Subbier -vs- W.P. Chetty
சுப்பையர் (எதிர்) டபிள்யூ.பி.செட்டி

(D) Salima bi -vs- Malika Begum
சலீமா பீ (எதிர்) மல்லிகா பேகம்

12. Tamilnadu Minor Inams Abolition Act, 1963 makes provisions regarding determination of compensation and tasdik allowance payable under section
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963ல் எப்பிரிவு இழப்பீட்டை தீர்மானித்தல் மற்றும் தஸ்திக் படிகள் குறித்து கூறுகிறது?

(A) 22
(B) 12
(C) 33
(D) 13

13. Section 4B of the Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 insists that the lease deed must be in
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச்சட்டம், 1955 பிரிவு 4B ன்படி குத்தகை ஆவணம் எத்தனை பிரதிகளில் இருக்க வேண்டும்?

(A) quadruplicate
4

(B) triplicate
3

(C) duplicate
2

(D) quintuplicate
5

14. Tamilnadu Minor Inams Abolition Act, 1963 came into force on
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963 நடைமுறைக்கு வந்த நாள்?

(A) 15.12.1963

(B) 15.12.1965

(C) 15.2.1963

(D) 15.2.1965

15. The Tamilnadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 was extended to the whole of the State of Tamilnadu
தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமங்கள் பதிவுறு சட்டம், 1969 தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்?

(A) 8.9.1971

(B) 9.8.1971

(C) 8.6.1971

(D) 6.8.1971

16. The Tamilnadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 in which section ousts the jurisdiction of civil courts in pending matters under the Act?
தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமங்கள் பதிவுறு சட்டம், 1969ன் எப்பிரிவு நிலுவையில் உள்ள விஷயங்களின் மீது உரிமையியல் நீதிமன்ற அதிகாரத்தை தடைசெய்கிறது?

(A) 16 A

(B) 16 B

(C) 16 C

(D) 16 D

17. Which section makes provisions for Ryotwari patta not to be granted in respect of private tank or oorani under the Tamilnadu Minor Inams Abolition Act, 1963?
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963ன் எப்பிரிவு தனியார் குளம் அல்லது ஊரணிக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கிறது?

(A) 10 A

(B) 16 A

(C) 47 A

(D) 42 (a)

18. Who was empowered to determine questions regarding Forests under the Tamilnadu Minor Inams Abolition Act, 1963?
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963ன் படி காடுகள் குறித்த வினாக்களுக்கு தீர்வு செய்யும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

(A) Assistant Settlement Officer
உதவி செட்டில்மெண்ட் அலுவலர்

(B) Settlement Officer
செட்டில்மெண்ட் அலுவலர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Government
அரசு

19. The Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 makes provision for deposit of rent by the cultivating tenant to the landlord under section
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955ன் எப்பிரிவு பயிரிடும் குத்தகைதாரரை நில உரிமையாளருக்குரிய குத்தகை தொகையை டெபாசிட் செய்ய வழிவகை செய்கிறது?

(A) 3 (3a)
(B) 3 (2a)
(C) 3 (3b)
(D) 3 (2b)

20. Which section makes provisions for eviction of cultivating tenants by Public Trust under the Tamil Nadu Public Trusts Act, 1961?
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் எப்பிரிவு பயிரிடும் குத்தகைதாரரை பொது கட்டளை நிறுவனம் வெளியேற்ற வழி செய்கிறது?

(A) 17
(B) 18
(C) 19
(D) 16

21. The Permanent Settlement in India is intimately connected with
இந்தியாவில் நிலையான நிலவரி திட்டம் யாருடன் தொடர்புடையது?

(A) Wellesley
வெலஸ்லி

(B) Dalhousie
டல்ஹௌஸி

(C) Cornwallis
காரன்வாலிஸ்

(D) Canning
கானிங்

22. Permanent settlement was finally established in
நிலையான நிலவரி திட்டம் இறுதியாக எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது?

(A) 1793
(B) 1784
(C) 1794
(D) 1783

23. The provisions relating to permission to public trust for personal cultivation in certain cases contained in which section of the Public Trusts Act, 1961?
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் எப்பிரிவு பொது கட்டளை நிறுவனத்தை சொந்த சாகுபடி செய்ய அனுமதி அளிக்கிறது?

(A) 12
(B) 13
(C) 11
(D) 14

24. The Tamilnadu cultivating tenants protection Act, 1955 makes provisions for protecting cultivating tenants against eviction by landlord under section
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955ன் எப்பிரிவு பயிரிடும் குத்தகைதாரரை நில உரிமையாளரால் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு செய்கிறது?

(A) 3
(B) 4
(C) 5
(D) 6

25. In which of the following town, there is no Revenue Court under the chair of Special Deputy Collector?
தனித்துணை ஆட்சியரின் கீழ் வருவாய் நீதிமன்றம் தனியாக அமைக்கப்படாத கீழ்க்கண்ட நகரம் எது?

(A) Lalgudi
லால்குடி
(B) Mannargudi
மன்னார்குடி
(C) Cuddalore
கடலூர்
(D) Kumbakonam
கும்பகோணம்

26. The term 'standard acre' is defined in which section of the Tamil Nadu Public Trusts Act, 1961
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் எப்பிரிவு நிலையான ஏக்கர் என்பதை வரையறை செய்கிறது?

(A) 2(22)
(B) 2(24)
(C) 2(18)
(D) 2(28)

27. Under the Tamilnadu Public Trusts Act, 1961, cultivating tenant's ceiling area' means
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் படி பயிரிடும் குத்தகைதாரரின் அதிகபட்ச பரப்பளவு எவ்வளவு?

(A) five standard acres
5 நிலையான ஏக்கர்

(B) 2 standard acres
2 நிலையான ஏக்கர்

(C) 2.5 standard acres
2.5 நிலையான ஏக்கர்

(D) 3.5 standard acres
3.5 நிலையான ஏக்கர்

28. Who authored the book "Land tenures in the Madras Presidency"?
"Land tenures in the Madras Presidency" என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

(A) S. Sundararaja Iyengar
எஸ். சுந்தரராஜ அய்யங்கார்

(B) B. Rajarama Iyer
பி. இராஜராம அய்யர்

(C) L. Srinivasa Iyengar
எல்.ஸ்ரீனிவாச அய்யங்கார்

(D) O.P. Tulsiram Iyer
ஓ.பி. துளசிராம் அய்யர்

29. The Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 makes provision for revision by the High Court under section
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955ன் எப்பிரிவு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு செய்வதற்கு வழி செய்கிறது?

(A) 5B

(B) 5C

(C) 6B

(D) 6C

30. The term 'public trust' is defined in which section of the Tamil nadu Public Trusts Act, 1961
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் எப்பிரிவு பொது கட்டளை என்பதை வரையறை செய்கிறது?

(A) 2(25)

(B) 2(26)

(C) 2(15)

(D) 2(16)

31. Section 2(22) of the Tamil nadu Public Trusts Act, 1961 defines the term
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் பிரிவு 2(22) வரையறை செய்யும் பதம்?

(A) Normal gross produce
சாதாரண மொத்த உற்பத்தி

(B) Personal cultivation
சுயசாகுபடி

(C) Plantation
தோட்ட விவசாயம்

(D) Possessory mortgagee
அனுபவ பாத்திய அடமானம்

32. Section 2(14) of the Tamil nadu Public Trusts Act, 1961 defines the term
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் பிரவு 2(14) வரையறை செய்யும் பதம்?

(A) inam land
இனாம் நிலம்

(B) orchard
பழத்தோட்டம்

(C) intermediary
இடைநிலை

(D) owner
உரிமையாளர்

33. The rent payable by the owners of permanently settled estates to Government is known as
நிலையாக குடியேறிய எஸ்டேட் உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வாடகை எவ்வாறு அளிக்கப்பட்டது?

(A) Peishkush
பெய்ஸ்குஸ்

(B) Seikal
செய்க்கல்

(C) Lakhiraj
லக்கிரஜ்

(D) Darkhast
தர்கஸ்த்

34. Section 2(2) of the Tamilnadu Public Trusts Act, 1961 defines the term
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம், 1961ன் பிரிவு 2 (2) வரையறை செய்யும் பதம்?

(A) agriculture
விவசாயம்

(B) authorized officer
அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்

(C) government
அரசு

(D) cultivating tenant
பயிரிடும் குத்தகைதாரர்

35. As per which section of the Hindu Marriage Act, 1955, divorced persons may marry again?
இந்து திருமண சட்டம் 1955ன் எப்பிரிவின் கீழ் விவாகரத்து பெற்றவர்கள் மறு திருமணம் செய்யலாம்?

(A) Section 15
பிரிவு 15

(B) Section 16(1)
பிரிவு 16(1)

(C) Section 16(2)
பிரிவு 16(2)

(D) Section 18
பிரிவு 18

36. The Tamil nadu Cultivating Tenants Protection Act, 1955 makes provision for exemption for the lands owned by Central, State Governments, Local Authorities and Universities from its operations under section
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955ன் எப்பிரிவு மத்திய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலை கழகங்களுக்கு சொந்தமான நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்கிறது?

(A) 1

(B) 2

(C) 7

(D) 8

37. Kabuliat means
கபூலியத் என்பது

(A) rent
வாடகை

(B) tax
வரி

(C) share
பங்கு

(D) agreement
ஒப்பந்தம்

38. Section 2(aa) of the Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 defines the term
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955ன் பிரிவு 2(aa) எந்த பதத்தை வரையறை செய்கிறது?

(A) Cultivating tenant
பயிரிடும் குத்தகைதாரர்

(B) Landlord
நில உரிமையாளர்

(C) Government
அரசு

(D) Sub tenant
உள் குத்தகைதாரர்

39. The approved record of tenancy rights shall be open to the inspection of the public at reasonable hours. The provision contained in section
அங்கீகரிக்கப்பட்ட குத்தகை உரிமைகள் பதிவுறு ஆவணங்களை வெளிப்படையாக பொது மக்கள் நியாயமான நேரத்தில் பார்வையிட எந்த சட்டப் பிரிவின் கீழ் வழிசெய்யப்பட்டுள்ளது?

(A) 14
(B) 16
(C) 18
(D) 20

40. Indemnity provisions in favour of authorities under the Tamilnadu Agriculture Lands Record of Tenancy Rights Act, 1969 contained in which section?
தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமங்கள் பதிவுறு சட்டம், 1969ன் எப்பிரிவு இச்சட்டத்தின்படியான அதிகாரிகளுக்கு காப்புரிமை அளிக்கிறது?

(A) 15
(B) 17
(C) 19
(D) 21

41. A book containnig accounts of a whole village is called
ஒரு கிராமத்தின் எல்லா கணக்குகளையும் காட்டும் புத்தகம் எது?

(A) Patta
பட்டா
(B) Chitta
சிட்டா
(C) Adangal
அடங்கல்
(D) FMB
எஃப்.எம்.பி

42. Ryotwari system was first introduced into the British possession in
ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட இடங்களுக்கு ரயத்துவாரி முறை முதன்முதலில் கொண்டு வரப்பட்ட ஆண்டு?

(A) 1792
(B) 1796
(C) 1794
(D) 1786

43. In ryotwari village who is the owner of waste and unoccupied lands?
ஒரு ரயத்துவாரி கிராமத்தில் யாராலும் அனுபவிக்கப்படாத மற்றும் வீணாக உள்ள நிலங்களுக்கு உரிமையாளர் யார்?

(A) Government
அரசு
(B) King
அரசர்
(C) Zamindar
ஜமீன்தார்
(D) Nearby cultivating tenant
அருகிலுள்ள பயிரிடும் குத்தகைதாரர்

44. Which section of the Land Acquisition Act, 1894 speaks about what are the matters to be neglected in determining compensation?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தில் எப்பிரிவு பங்கினை தீர்மானிக்கும் போது புறக்கணிக்கப்பட வேண்டிய விஷயங்கள் குறித்து கூறுகிறது?

(A) 21
(B) 22
(C) 23
(D) 24

45. Divorce by mutual consent is provided under which section of the Hindu Marriage Act, 1955
இந்து திருமண சட்டம் 1955ன் எப்பிரிவின் கீழ் மனமொத்த விவாகரத்து வழங்கப்படுகிறது?

(A) 13-A
(B) 13-B
(C) 13-C
(D) 13-D

46. Which section of the Land Acquisition Act, 1894 speaks about what are the matters to be taken into consideration by the Court in determining compensation?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தில் எப்பிரிவு பங்கினை தீர்மானிக்கும் போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயங்கள் குறித்து கூறுகிறது?

(A) 21
(B) 22
(C) 23
(D) 24

47. The share of the produce due to the landlord or the State is called
அரசு அல்லது நில உரிமையாளருக்கு விளைச்சலில் சேர வேண்டிய பங்கு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) Melwaram
மேல்வாரம்
(B) Kudiwaram
குடிவாரம்
(C) Kabuliat
கபூலியத்
(D) Lakhiraj
லக்கிரஜ்

48. The Land Acquisition Act, 1894 came into force on
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டம் எப்போது நடைமுறைக்கு வந்தது?

(A) 1.3.1894
(B) 1.11.1894
(C) 1.12.1894
(D) 1.7.1894

49. Section 3(b) of the Land Acquisition Act, 1894 defines the term
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 3(b)எந்த பதத்தை வரையறை செய்கிறது?

(A) Land
நிலம்

(B) Company
நிறுவனம்

(C) Person interested
அக்கறையுள்ள நபர்

(D) Public purpose
பொது நோக்கம்

50. At the time of marriage, the bridegroom must have completed 21 years of age and the bride must have completed 18 years of age with effect from
கீழ்கண்ட எந்த நாள் முதல் திருமணம் செய்து கொள்ள மணமகனுக்கு 21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் பூர்த்தியாயிருக்க வேண்டும் என்று நடைமுறைப்படுத்தப்பட்டது?

(A) 1-10-1978

(B) 1-11-1978

(C) 1-10-1979

(D) 1-11-1979

51. Section 3(a) of the Land Acquisition Act, 1894 defines the term
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 3(a) எந்த பதத்தை வரையறை செய்கிறது?

(A) Person interested
அக்கரையுள்ள நபர்

(B) Land
நிலம்

(C) Public purpose
பொது நோக்கம்

(D) Company
நிறுவனம்

52. Section 3(e) of the Land Acquisition Act, 1894 defines the term
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 3(e) எந்த பதத்தை வரையறை செய்கிறது?

(A) Person interested
அக்கரையுள்ள நபர்

(B) Land
நிலம்

(C) Public Purpose
பொது நோக்கம்

(D) Company
நிறுவனம்

53. Inam is a/an
இனாம் என்பது

(A) Latin term
இலத்தீன் மொழிச் சொல்

(B) Urdu term
உருது மொழிச் சொல்

(C) French term
பிரஞ்சு மொழிச் சொல்

(D) Arabic term
அரபிக் மொழிச் சொல்

54. Ordinarily who is the best authority to determine whether the purpose in question is a public purpose or not?
ஒரு காரணம் பொது நோக்கமுடையதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் யாருடையது?

(A) Government
அரசு

(B) King
அரசர்

(C) Land owner
நில உரிமையாளர்

(D) Citizens
குடிமக்கள்

55. Section 16A of the Tamilnadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 relates to
தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமங்கள் பதிவுறு சட்டம், 1969ன் பிரிவு 16A எது தொடர்புடையது?

(A) Power to take evidence on oath
பிரமாணத்தின் பேரில் சாட்சியம் எடுக்கும் அதிகாரம்

(B) Act to override contract and other laws
ஒப்பந்தங்கள் மற்றும் பிற சட்டங்களை மிஞ்சி செயல்படுதல்

(C) Bar of jurisdiction of Civil Courts
உரிமையியல் நீதிமன்றத்தில் அதிகாரத்தை தடை செய்தல்

(D) Exemption provisions
விதிவிலக்கு அம்சங்கள்

56. Dehaut is technically called
திஹத் என்பது நுட்பமாக பார்த்தால்

(A) Melwaram
மேல்வாரம்

(B) Kudiwaram
குடிவாரம்

(C) Major Inam
மேஜர் இனாம்

(D) Minor Inam
மைனர் இனாம்

57. Section 3(f) of the Land Acquisition Act, 1894 defines the term
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 3(f) எந்த பதத்தை வரையறை செய்கிறது?

(A) Person interested
அக்கரையுள்ள நபர்

(B) Company
நிறுவனம்

(C) Land
நிலம்

(D) Public purpose
பொது நோக்கம்

58. Which part of the Land Acquisition Act, 1894 deals with preliminary investigation, objections and taking possession of the land?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பகுதி முதல்நிலை விசாரனை, எதிர்ப்புரைகள் மற்றும் நிலத்தை சுவாதீனப்படுத்துதல் ஆகிய விஷயங்கள் குறித்து கூறுகிறது?

(A) II
(B) III
(C) IV
(D) V

59. Which section of the Land Acquisition Act, 1894 deals with initial stage of the procedure which is to be followed in land acquisition proceedings?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு நில எடுப்பு நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளில் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் குறித்து கூறுகிறது?

(A) 4
(B) 6
(C) 7
(D) 9

60. Which section of the Hindu Marriage Act, 1955 deals with punishment of bigamy?
இந்து திருமண சட்டம் 1955ன் எப்பிரிவின் கீழ் இருமணத்திற்கு தண்டனை வழங்கப்படுகிறது?

(A) 17
(B) 20
(C) 19
(D) 21

61. Which section of the Land Acquisition Act, 1894 speaks about declaration of intended acquisition?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு நில எடுப்பு நடவடிக்கைகளுக்கான விளம்புகை குறித்து கூறுகிறது?

(A) 4
(B) 5
(C) 6
(D) 7

62. Jagirs relate to
ஜாகீர்ஸ் தொடர்புடையது

(A) grand of land in lieu of wages
ஊதியத்திற்கு பதிலாக நிலம் வழங்குதல்
(B) share in the produce of land
நிலத்தின் விளைச்சலின் பங்கு
(C) major inam
மேஜர் இனாம்
(D) minor inam
மைனர் இனாம்

63. Which section of the Land Acquisition Act, 1894 empowers the officers of have right of entry with the land for doing necessary preliminary works?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு நில எடுப்பு நடவடிக்கைகளுக்கான ஆரம்ப கட்ட பணிகளின் போது நிலத்தில் நுழைவதற்கு அலுவலர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது?

(A) 4(2)
(B) 5(2)
(C) 6(2)
(D) 8(2)

64. Which section of the Land Acquisition Act, 1894 speaks about the right of a person having interest in land to raise objections and an opportunity of being heard?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு நிலத்தில் அக்கரையுள்ள நபர்க்கு அவரது மறுப்புரையை தெரிவிக்கவும் அவருக்கு உரிய சந்தர்ப்பம் வழங்கவும் வழி செய்கிறது?

(A) 5A
(B) 5B
(C) 6A
(D) 6B

65. Which section of the Land Acquisition Act, 1894 deals with special powers of Government in cases of urgency?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு அரசிற்கு அவசர காலங்களில் சிறப்பு அதிகாரங்கள் வழங்குகிறது?

(A) 16
(B) 17
(C) 21
(D) 19

66. In which case, the court held that the Government cannot change purpose and acquired for purpose other than that declared under section 6(2) of the Land Acquisition Act?
கீழ்கண்ட எந்த வழக்கில் நில எடுப்புச் சட்டம் பிரிவு 6(2)ன் படி அரசு நில எடுப்பிற்கு காரணமாக குறிப்பிட்ட நோக்கத்திற்கு மாறாக வேறு காரியத்திற்கு மாற்றி செயல்படுத்த முடியாது என்று நீதிமன்றம் குறிப்பிட்டது?

(A) State of Madras – Vs- Ramani Iyer
மதராஸ் அரசு எதிர் ரமணி ஐயர்

(B) Union of India –Vs- smt. Shanthi Devi
யூனியன் ஆ்ஃப் இந்தியா எதிர் திருமதி சாந்தி தேவி

(C) Union of India –Vs- Nandakishore and others
யூனியன் ஆ்ஃப் இந்தியா எதிர் நந்தாகிஷோர் மற்றும் பலர்

(D) Union of India –Vs- V.M. Sami
யூனியன் ஆ்ஃப் இந்தியா எதிர் வி.எம்.சாமி

67. The Collector should make an award under the Land Acquisition Act, 1894 within how many months/years from the date of publication of declaration?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் படி மாவட்ட ஆட்சியர் இழப்பீட்டு தொகையை விளம்புகை செய்யப்பட்ட நாளிலிருந்து எத்தனை மாதங்கள் அல்லது எத்தனை ஆண்டுகளுக்குள் தீர்மானிக்க வேண்டும்?

(A) 6 months
ஆறு மாதங்கள்

(B) 1 year
ஓர் ஆண்டு

(C) 3 months
மூன்று மாதங்கள்

(D) 2 years
இரு ஆண்டுகள்

68. An award is made by the collector under which section of the Land Acquisition Act, 1894
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவின்படி மாவட்ட ஆட்சியர் இழப்பீட்டு தொகையை தீர்மானிக்கிறார்?

(A) 11
(B) 16
(C) 21
(D) 26

69. Part III of the Land Acquisition Act, 1894 deals with
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் பகுதி 3 தொடர்புடையது?

(A) Special powers of Government
அரசின் சிறப்பு அதிகாரங்கள்

(B) Procedure for acquisition
நில எடுப்பு வழிமுறைகள்

(C) Reference to Court
நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல்

(D) Powers of acquisition officer
நில எடுப்பு அலுவலரின் அதிகாரங்கள்

70. The leading case Hari Narayan Singh –Vs- Sriram Chakravarthi relates to
ஹரி நாராயண சிங் எதிர் ஸ்ரீராம் சக்ரவர்த்தி என்ற புகழ்பெற்ற வழக்கு தொடர்புடையது

(A) Right to Minerals
கனிமங்கள் உரிமை

(B) Right to trees
மரங்கள் உரிமை

(C) Right to waste land
தரிசு நிலம் உரிமை

(D) Right to water
தண்ணீர் உரிமை

71. Which section of the Land Acquisition Act, 1894 deals with the question of which is deemed to be a company for the purpose of acquisition of land?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு ஒரு நிறுவனத்திற்காக நிலம் எடுக்கும்போது நிறுவனம் குறித்த கேள்விகள் தொடர்புடைய விஷயங்களை கூறுகிறது?

(A) 31A

(B) 34A

(C) 33A

(D) 38A

72. Melwaram, in the strict sense, is a
மேல்வாரம் என்பது உள்ளார்ந்து பார்க்கும் போது அதன் பொருள்

(A) Rent
வாடகை

(B) Tax
வரி

(C) Title
உரிமை

(D) None of the these
இவை எதுவுமில்லை

73. Under Ryotwari system who was regarded as the owner of the soil?
ரயத்வாரி முறைப்படி மண்ணிற்கு உரிமையாளராகக் கருதப்படுபவர் யார்?

(A) Melwaramdar
மேல்வாரம்தாரர்

(B) Kudiwaramdar
குடிவாரம்தாரர்

(C) King
அரசர்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

74. 'ryot' is a/an
ரயத் என்பது

(A) arabic term
அரபு மொழிச் சொல்

(B) sanskrit term
சம்ஸ்க்ருத மொழிச் சொல்

(C) persian term
பெர்சியன் மொழிச் சொல்

(D) urdu term
உருது மொழிச் சொல்

75. The leading case Narayana Ayyangar –Vs- Orr relates to
நாராயண அய்யங்கார் எதிர் ஆர் என்ற புகழ்பெற்ற வழக்கு தொடர்புடையது

(A) Right to Minerals
கனிமங்கள் உரிமை

(B) Right to irrigation
பாசன உரிமை

(C) Right to waste land
தரிசு நிலம் உரிமை

(D) Right to pathway
நடைபாதை உரிமை

76. Urlams case is
ஊர்லாம் வழக்கு எது?

(A) Gopalsamy chettiar –Vs- Secretary of state
கோபால் சாமி செட்டியார் எதிர் அரசுச் செயலர்

(B) Prasad Rao –Vs- Secretary of state
பிரசாத் ராவ் எதிர் அரசுச் செயலர்

(C) Narayana Ayyangar –Vs- Orr
நாராயண அய்யங்கார் எதிர் ஆர்

(D) Hari Narayan Singh –Vs- Sriram Chakravarthi
ஹரி நாராயண சிங் எதிர் ஸ்ரீராம் சக்ரவர்த்தி

77. Which of the following is not under the category of Brahmadayam?
கீழ்கண்டவற்றுள் பிரம்மதாயம் வகையில் அடங்காதது எது?

(A) Adhyanam
அத்யனம்

(B) Bharati
பாரதி

(C) Battavritti
பட்டவிருத்தி

(D) Swatantarams
ஸ்வதந்த்ரம்ஸ்

78. Tasdik and Mohini allowances relate to
தஸ்திக் மற்றும் மோகினி தொடர்புடையது

(A) Temples and Mosques
கோயில்கள் மற்றும் மசூதிகள்

(B) Temples only
கோயில்கள் மட்டும்

(C) Mosques only
மசூதிகள் மட்டும்

(D) Brahmins
பிராமணர்கள்

79. Who has observed "Really the 'Standing Orders' of the Board are the Land Revenue Code of this Province and no one can thoroughly master the revenue administration without studying these in detail"?
வருவாய் நிலை ஆணைகள் என்பது இந்த மாகாணத்தின் நில நிர்வாக நடைமுறைச் சட்டத் தொகுப்பு ஆகும் என்றும் இவற்றை முழுவதுமாகப் படிக்காதவர்கள் வருவாய் நிர்வாகத்தில் திறம்படச் செயல்பட முடியாது என்று கூறியவர் யார்?

(A) Baden Powell
பேடன் பவல்

(B) Sadasiva Iyer
சதாசிவ ஐயர்

(C) Sundararaja Iyengar
சுந்தரராஜ ஐயங்கார்

(D) Col. Read
கலோனல் ரீட்

80. 'ryot' means
ரயத் என்பதன் பொருள்

(A) protected
பாதுகாக்கப்பட்டது

(B) encumbrance
வில்லங்கம்

(C) lawful
சட்டப்படியானது

(D) illegal
சட்ட விரோதமானது

81. To whom cultivating tenant shall apply for the right to restoration of possession under Tamil nadu cultivating tenants protection act 1955?
தமிழ்நாடு விவசாய குத்தகைகாரர் பாதுகாப்பு சட்டம் 1955ன் படி எந்த பிரிவின் கீழ் குத்தகைதாரர் தங்களது உடைமைகளை மீட்டெடுக்கும் உரிமைக்காக யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்

(A) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

(B) Tahsildar
வட்டாட்சியர்

(C) District Revenue officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) District Collector
மாவட்ட ஆட்சித் தலைவர்

82. Under which section in Tamilnadu cultivating Tenants (payment of fair rent) act 1956 "Land owner" is defined?
தமிழ்நாடு விவசாயி குத்தகைதாரர்கள் (நியாய வாடகை செலுத்துதல்) சட்டம் 1956 பாதுகாப்பு சட்டத்தில் எந்த பிரிவின் கீழ் "நில உரிமையாளர்" விவரிக்கப்பட்டுள்ளது?

(A) Section 2(f)
பிரிவு 2(f)

(B) Section 2(g)
பிரிவு 2(g)

(C) Section 3(a)
பிரிவு 3(a)

(D) Section 2(h)
பிரிவு 2(h)

83. Fair rent determined under the Tamilnadu cultivating tenants (payment of fair rent) act 1956 continue in force for
தமிழ்நாடு விவசாய குத்தகைதாரர்கள் (நியாய வாடகை செலுத்துதல்) சட்டம் 1956-ன் படி தீர்மானிக்கப்பட்ட நியாய வாடகை அமுலில் இருக்கும் காலம்.

(A) 5 years
5 வருடங்கள்

(B) 3 years
3 வருடங்கள்

(C) 2 years
2 வருடங்கள்

(D) 7 years
7 வருடங்கள்

84. Order of the rent tribunal under Tamil Nadu cultivating tenants (payment of fair rent) Act 1956 shall be liable to revision by the
தமிழ்நாடு விவசாய குத்தகைதாரர்கள் (நியாய வாடகை செலுத்துதல்) சட்டம் 1956ன் படி வாடகை தீர்ப்பாயத்தின் உத்தரவு பின்வரும் அமைப்பின் சீராய்வுக்கு உட்பட்டது.

(A) Government
அரசு

(B) sub court
சப் கோர்ட்

(C) district court
மாவட்ட நீதிமன்றம்

(D) high court
உயர் நீதிமன்றம்

85. Authority to constitute the advisory committee under Tamil Nadu agricultural land record of tenancy rights act 1969 for the purpose of advising the record officer
தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமை ஆவணங்கள் சட்டம் 1969-ன் பிரிவு அலுவலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஆலோசனை குழு அமைக்க அதிகாரம் பெற்றவர்

(A) Government
அரசு

(B) District collector
மாவட்ட ஆட்சித்தலைவர்

(C) District revenue officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) District court
மாவட்ட நீதிமன்றம்

86. Who shall issue patta pass book under Tamil nadu patta pass book act 1983?
தமிழ்நாடு பட்டா பாஸ்புத்தக சட்டம் 1983-ன் கீழ் யாரால் பட்டா பாஸ்புத்தகம் வழங்கப்பட வேண்டும்?

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) Revenue Inspector
வருவாய் ஆய்வாளர்

(C) Revenue Divisional officer
வருவாய் கோட்ட அலுவலர்

(D) Tahsildar
வட்டாட்சியர்

87. Under which section person shall be convicted forcing open the door of dwelling houses contrary to the provisions of the Revenue recovery act 1864?
தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம் 1864 ஏற்பாடுகளுக்கு முரணாக குடியிருப்பு கதவுகளை கட்டாயப்படுத்தி திறக்கும் நபர் எந்த பிரிவின்படி தண்டனைக்குரியவர்

(A) Section 10
பிரிவு-10

(B) Section 15
பிரிவு-15

(C) Section 18
பிரிவு-18

(D) Section 21
பிரிவு-21

88. Authority to decide any question arises as to whether a place is not a temple as defined under Tamilnadu Temple Entry authorization act 1947?
தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டம் 1947-ன்படி ஒரு இடம் கோயில் அல்ல என தீர்மானிக்க அதிகாரம் பெற்றவர்

(A) Government
அரசாங்கம்

(B) Commissioner
ஆணையர்

(C) Joint Commissioner
இணை ஆணையர்

(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

89. Under which section of Tamilnadu prohibition of Ritual and practice of Burying alive of a person act 2002 for Burying the person alive in the place of worship
தமிழ்நாடு சடங்கு மற்றும் சம்பிரதாய சட்டத்தின் கீழ் உயிருடன் இருக்கும் ஒருவரை புதைக்கும் தடை சட்டம் 2002-ன் படி "ஒரு இடத்தின் எல்லை" எந்த பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) Section 2(c)
பிரிவு-2(சி)

(B) Section 2(a)
பிரிவு-2(எ)

(C) Section 3
பிரிவு-3

(D) Section 2(b)
பிரிவு-2(பி)

90. What is the term of imprisonment under the Tamil Nadu prohibition of ritual and practice of burying the person Act 2002 alive in the place of worship?
தமிழ்நாடு சடங்கு மற்றும் சம்பிரதாய சட்டத்தின் கீழ் உயிருடன் இருக்கும் ஒருவரை புதைக்கும் தடை சட்டத்தின்படி உயிருள்ள நபர் ஒருவரை வழிபடும் இடத்தில் புதைத்தல் அதற்கான சிறை தண்டனை காலம்

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) 1 year
1 ஆண்டு

(C) 3 years
3 ஆண்டுகள்

(D) 5 years
5 ஆண்டுகள்

91. What is the amount of compensation payable under the Tamil Nadu Estates (abolition and conversion) act 1963 in respect of any estates where the basic annual sum does not exceed Rs. 1,000?
தமிழ்நாடு இனாம் (எஸ்டேட்) ஒழிப்பு சட்டம் 1963 -ன் படி எஸ்டேட்டின் ஆண்டு வருமானம் ரூ. 1000/-க்கு மிகாமல் இருநதால் வழங்க வேண்டிய இழப்பீடு

(A) 20 times of such sum
20 மடங்கு

(B) 25 times of such sum
25 மடங்கு

(C) 30 times of such sum
30 மடங்கு

(D) 10 times of such sum
10 மடங்கு

92. Under which section of the Tamil Nadu minor inams (abolition and conversion in to Roytwari) act 1963 Government may appoint assistant settlement officer?
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963-ன் கீழ் எந்த பிரிவின்படி அரசு உதவி செட்டில்மெண்ட் அலுவலரை நியமனம் செய்யலாம்?

(A) Section 3
பிரிவு-3

(B) Section 4
பிரிவு-4

(C) Section 5
பிரிவு-5

(D) Section 6
பிரிவு-6

93. Authority to determine the compensation and Tasdic allowance payable for the religious institution under the Tamil Nadu minor inams (Abolition and conversion Ryotwari) Act 1963?
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963-ன் கீழ் அறநிறுவனத்திற்கு வழங்க வேண்டிய இழப்பீடு மற்றும் தொகையை உறுதிபடுத்துவதற்கு அதிகாரம் பெற்றவர்

(A) District collector
மாவட்ட ஆட்சித் தலைவர்

(B) Assistant settlement officer
உதவி செட்டில்மெண்ட் அலுவலர்

(C) Tribunal
தீர்ப்பாயம்

(D) Settlement officer
செட்டில்மெண்ட் அலுவலர்

94. Quate the year of the principle act repealed under Tamil Nadu Animals and Birds sacrifices prohibition (Repeal) act 2004
தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகள் வதைப்பதை தடுக்கும் (திருத்தம்) சட்டம் 2004-ன் படி திரும்பபெறப்பட்ட முதன்மை சட்டத்தின் வருடத்தினை குறிப்பிடுக.

(A) 1949

(B) 1951

(C) 1950

(D) 1952

95. What is the time limit to make an application for the payment by the person in whose favour an order for payment has been made by the Tribunal under the Tamil Nadu minor inams (Abolition and conversion into Ryotwari) act-1963?
தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம் 1963-ன் கீழ் ஒருவருக்கு தீர்ப்பாயத்தால் வழங்க உத்திரவிடப்பட்டுள்ள தொகையை பெறுவதற்கு மனுத்தாக்க செய்ய வேண்டிய கால அவகாசம் என்ன?

(A) 1 month
1 மாதம்

(B) 2 months
2 மாதங்கள்

(C) 45 days
45 நாட்கள்

(D) 3 months
3 மாதங்கள்

96. Under which section of the Tamil Nadu minor inams (abolition and conversion in to ryotwari) Act 1963 Ryotwari patta cannot be granted for the land under common use of the village
கிராமத்தின் பொது உபயோகத்தில் உள்ள நிலத்திற்கு தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் ரயத்வாரி பட்டா வழங்கமுடியாது?

(A) Section 9(c)
பிரிவு-9(சி)

(B) Section10 (b)
பிரிவு-10(பி)

(C) Section 10
பிரிவு-10

(D) Section 11
பிரிவு-11

97. Authority to appoint settlement officer under the Tamil Nadu estates (abolition and conversion) act 26/1963.
தமிழ்நாடு இனாம் (எஸ்டேட்) ஒழிப்பு சட்டம் 26/1963 ன் கீழ் செட்டில்மெண்ட் அலுவலரை நியமனம் செய்ய அதிகாரம் பெற்றவர்

(A) Government
அரசு

(B) District Collector
மாவட்ட ஆட்சித்தலைவர்

(C) District Revenue officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) Sub Courts
சப்கோர்ட்

98. Under which section worship is defined under Tamil Nadu temple entry authorisation act 1947?
தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டம் 1947-ன் எந்த பிரிவின் கீழ் "வழிபாடு" வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) Section 2(2)
பிரிவு - 2(2)

(B) Section 3(1)
பிரிவு - 3(1)

(C) Section 3(2)
பிரிவு - 3(2)

(D) Section 4
பிரிவு - 4

99. What is the time limit for filing suits by persons aggrieved by proceedings under Revenue Recovery Act?
தமிழ்நாடு வருவாய் வசூல் சட்ட நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர் வழக்கு தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் என்ன?

(A) one month
ஒரு மாதம்

(B) six months
ஆறு மாதங்கள்

(C) three months
மூன்று மாதங்கள்

(D) one year
ஒரு வருடம்

100. Under which section "Temple" is defined as public trust under the Tamil Nadu Public Trust Act 1961?
தமிழ்நாடு பொது கட்டளை (Public Trust) சட்டம் 1961-ன் படி எந்த பிரிவின் கீழ் "கோயில்" ஒரு பொது கட்டளை என வரையறுக்கப்பட்டுள்ளது.

(A) section 23
பிரிவு-23

(B) section 25(3)
பிரிவு-25(3)

(C) section 24
பிரிவு-24

(D) section 2 25(i)
பிரிவு-2 25(i)